# தோள்பட்டை தசை பிடிப்பா? மூட்டு விலகலா? கேஎம்சிஎச்-ல் நுண் துளை அறுவை சிகிச்சை

கோவை, செப்.7: தோள் மூட்டு விலகுதல் என்பது பொதுவாக காணப்படும் பாதிப்புகளில் ஒன்று. இந்த பாதிப்பு விளையாட்டு வீரர்களுக்கும், விபத்துகள் ஏற்பட்டவர்களுக்கும், பிறவியிலேயே சதை தளர்வு உள்ளவர்களுக்கும், அடிக்கடி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

தோள் பட்டை மூட்டு நன்றாக இருந்தால் மட்டுமே நாம் அன்றாட வேலைகளை சரிவர செய்ய முடியும். கைகளை பின்னோக்கியோ அல்லது முன்னோக்கியோ மிக வேகமாக செயல்படுத்தும்போது மூட்டு விலகல் ஏற்படுகிறது. இந்த பாதிப்பு 20 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ஏற்பட்டால், சதை அதிகம் கிழிந்து மூட்டு மீண்டும் மீண்டும் விலகுவதற்கு 70-80 சதவீதம் வாய்ப்பு இருக்கிறது. இத்தகைய பாதிப்பு ஏற்பட்டவர்கள் விரைவில் நுண்துளை அறுவை சிகிச்சை செய்து கிழிந்த சதையை சரிசெய்வதன் மூலம் இந்த பிரச்னை மறுபடியும் வராமல் தவிர்க்கலாம்.

இந்த அறுவை சிகிச்சை செய்பவர்கள் 6 வாரம் வரை ஓய்வு எடுக்க வேண்டும். பழைய நிலைமைக்கு அதிகபட்சம் 3 மாதங்களில் திரும்பிவிடலாம். இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ளாமல் விடும் பட்சத்தில் அன்றாட அடிப்படை வேலையை செய்வதற்கே மிகுந்த சிரமப்பட வேண்டி இருக்கும். அறுவை சிகிச்சை செய்துகொள்ளாமல் விடும் பட்சத்தில் அடிக்கடி மூட்டு விலகல் ஏற்பட்டு ஒரு கட்டத்தில் மூட்டு தேய்மானம் அடைந்து மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை உருவாகிவிடும். எந்த பாதிப்புகளையும் ஆரம்பத்திலேயே குணப்படுத்திவிட்டால் அதன் பக்கவிளைவுகளில் இருந்து எளிதாக விடுபட்டு விடலாம்.


கே. பாஸ்கரன்

பிறவியிலேயே தளர்வான தசையினால் மூட்டு விலகல் பாதிப்பு இருப்பவர்கள் பிசியோதெரபியின் மூலம் சரி செய்து கொள்ளலாம். 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூட்டு விலகுதலை விட எலும்பு முறிதல் அதிகமாக ஏற்படும். இருப்பினும் மூட்டு விலகுதல் அடிக்கடி நடந்தால் அறுவை சிகிச்சை செய்துகொண்டால் பயனளிக்கும்.

அதேபோல், 40 முதல் 50 வயதுடையவர்களுக்கு தோள் மூட்டு பிடிப்பு ஏற்படுகிறது.

சர்க்கரை நோய் உள்ளவர்களில் அதிலும் குறிப்பாக இன்சுலின் எடுப்பவர்களுக்கு தோள்பட்டை பிரச்னை வருவதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும் இவர்களுக்கு வலியும் அதிகமாக இருக்கும். பக்கவாதம், அடிபடுதல், கை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், குறைவாக தைராய்டு சுரப்பவர்களுக்கும், அதிகம் கொழுப்பு உள்ளவர்களுக்கும் வரும். மேலும் காரணங்கள் இல்லாமலேயே இந்த பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இதனால், அன்றாட வாழ்க்கைக்கு தேவையான வேலைகளில் சிரமம் இருக்கும். தோள் பட்டை வலி ஏற்பட்டதும் மருத்துவர்களை அணுகும் பட்சத்தில் வலியில் இருந்து விரைவில் வெளிவர முடியும். இது போன்ற பாதிப்புகள் ஏற்பட்டவர்களுக்கு பிசியோ தெரபி மூலமாகவும், வலி நிவாரண மருந்துகள் மூலமாகவும் குணப்படுத்த முடியும். இதற்கு மேலும் வலி இருக்கும் பட்சத்தில் மயக்கமருந்து கொடுத்து தோள் பட்டையை மெதுவாக முழு சுற்று சுற்றுவதன் மூலம், அறுவை சிகிச்சை இல்லாமலேயே எல்லா அசைவுகளை வரவழைத்துவிடலாம். இதில் குணமாகாவிட்டால், நுண்துளை அறுவை சிகிச்சை மூலம் உடனடி நிவாரணம் பெறலாம். இந்த பாதிப்புகள் ஆண்களை விட பெண்களுக்கு அதிகமாக ஏற்படுகிறது.

தோள்பட்டை பிரச்னைகள் பற்றிய போதிய விழிப்புணர்வு இன்றி பலதரப்பட்ட மக்கள் வலியில் தங்கள் வாழ்க்கையை கழிக்கின்றனர். இத்தகைய பாதிப்புகள் எளிமையாக சரிசெய்யக்கூடியவையே என்று கே.எம்.சி.எச் மருத்துவமனை தோள் மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பாஸ்கரன் தெரிவித்தார்.

தொடர்புக்கு: கே.எம்.சி.எச். மருத்துவர் கே. பாஸ்கரன் செல்: 94431 35854